தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: 9 **திகதி**: 21.06.2025

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு. ச. தேவராசா

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	10	
வினா 2	10	
வினா 3	20	
வினா 4	20	
வினா 5	20	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	10	பக்கம்	2

கேட்டுப் பதில் அளித்தல்.

1. முத்தமிழ் எவை? (1 புள்ளி)

_____

2. இயல் என்பதன் பொருள் என்ன? (1 புள்ளி)

_____

3. நீங்கள் இயல், இசை, நாடகம் மூன்றையும் எவ்வாறு விளக்குவீர்கள்? (4 புள்ளிகள்)

_____

_____

_____

_____

4. நாடகத்தின் வகைகள் எவை? (2 புள்ளிகள்)

_____

_____

5. கலைவிழாவில் நீங்கள் நடித்த மகாபாரதம் எந்த நாடக வகையைச் சேர்ந்தது? (2 புள்ளிகள்)

_____

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	3

பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.

1. வணக்கம்: _____

_____

2. தமிழ்மொழி: _____

_____

3. கலைவிழா: _____

_____

4. நட்சத்திரங்கள்: _____

_____

5. தைப்பொங்கல்: _____

_____

6. கூவியது: _____

_____

7. விளையாடினார்கள்: _____

_____

8. படிக்கின்றேன்: _____

_____

9. வருவார்கள்: _____

_____

10. நடித்தோம்: _____

_____

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	4

வாசித்துப் பதில் அளித்தல் - பகுதி 1

மலர்கள்

மலர்கள் அழகானவை. மனதுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துபவை. மக்கள் இயற்கை அழகை ரசிக்க வேண்டும். சூரியோதயக் காட்சி, சூரியன் மறையும் காட்சி, சந்திரோதயக் காட்சி, முழுநிலவு வானத்தில் பவனி வரும் காட்சி என்பவற்றைப் பார்த்து மகிழ்வதுடன் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் தோட்டங்கள், வயல்கள், பயன்தரும் மரங்கள், வானளாவ உயர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கும் மலைகள், செடிகளிலும், கொடிகளிலும், மரங்களிலும், தடாகங்களிலும் பூத்துக் குலுங்கும் மலர்களையும் ரசிக்க வேண்டும். மன அழுத்தம் இல்லாத மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இது உதவும்.

செடியில் மலரும் மலர்களுக்கு உதாரணமாக ரோஜா, கனகாம்பரம் போன்றவற்றையும் கொடியில் பூக்கும் மலர்களுக்கு உதாரணமாக சங்குப் பூ, சம்பங்கிப் பூ போன்றவற்றையும், மரங்களில் மலரும் மலர்களுக்கு உதாரணமாக செவ்வரத்தம் பூ, அசோகா போன்றவற்றையும், தடாகத்தில் மலரும் பூக்களுக்கு உதாரணமாக தாமரை, அல்லி போன்றவற்றையும் கூறலாம். மக்களின் மனதைக் கவரும் வாசனையைக் கொண்ட மல்லிகை அதனை வளர்க்கும் முறையை அடிப்படையாகக் கொண்டு செடி அல்லது கொடி என்று அழைக்கப்படுகின்றது. பந்தல் அமைத்தல் அதில் மல்லிகையைப் படரவிட்டு வளர்க்கும் போது அது கொடிவகையில் அடங்குகின்றது. ஒரு குறிப்பிடத்தக்களவு உயரத்திற்கு கட்டையாக வெட்டி வளர்க்கின்ற போது அது செடி என்ற வகையில் அடங்குகின்றது.

1. மலர்கள் எப்படிப்பட்டவை? (2 புள்ளிகள்)

_____

_____

2. இயற்கை அழகு புலப்படுத்தப்படும் நான்கு காட்சிகளை எழுதுக. (8 புள்ளிகள்)

★ _____

★ _____

★ _____

★ _____

3. பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக. (8 புள்ளிகள்)

அ	செடியில் மலரும் மலர்கள்	
ஆ	கொடியில் மலரும் மலர்கள்	
இ	மரங்களில் மலரும் மலர்கள்	
ஈ	நீரில் மலரும் மலர்கள்	

4. மல்லிகை எவ்வாறு ஏனையவற்றை விட வேறுபடுகின்றது? (2 புள்ளிகள்)

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	6

வாசித்துப் பதில் அளித்தல் - பகுதி 2

நதிக்கரையோர நாகரீகங்கள்

உலகத்தில் மக்கள் ஆரம்பத்தில் நதிகளின் அருகில் இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்தனர். இதற்குக் காரணங்கள் பல இருந்தன. குடிப்பதற்கும், குளிப்பதற்குமான நீர்வசதி, பயிர்ச்செய்கைக்கான நீரைப் பக்கத்திலேயே பெற்றுக் கொள்ளலாம், மீன் பிடிக்கலாம் போன்றனவே அவை. காலப்போக்கில் நதிக்கரையோரங்களில் பல்வேறு வசதிகளுடன் கூடிய வீடுகளைக் கட்டி நாகரீகம் மிக்க சமுதாயமாக அவர்கள் வாழ்ந்தனர். ஆனால் ஒரு கட்டத்தில் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பாயும் போது தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்கள் மேட்டுநிலத்தை நோக்கி இடம்பெயர்ந்தனர். நதி வெள்ளம் கொண்டு வந்த மண்ணால் இவர்கள் முன்பு குடியிருந்த வீடுகள் மூடப்பட்டன. காலப்போக்கில் அவை பூமிக்குள் அமிழ்ந்துவிட்டன.

புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்தில் உள்ள நைல் நதிக்கரையோரத்தைத் தோண்டிப் பார்த்தபோது நைல்நதி நாகரீகம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான் இருநாடுகளிலும் ஓடுகின்ற சிந்து நதிக்கரையோரத்தை அகழ்ந்து பார்த்தபோது சிந்து சமவெளி நாகரீகம் கண்டறியப்பட்டது. அக்காலத்தில் மெசபொத்தேமியா என்று அழைக்கப்பட்ட தற்கால ஈராக்கிலுள்ள யூபிரதீஸ், தைகரீஸ் நதிக்கரையோரங்களை அகழ்ந்தபோது பாபிலோனிய நாகரீகம் கண்டுபிடிக்கப்பட்டது. சீனாவின் யாங்கிசிக்கியாங் நதிக்கரையோரத்தில் புதைபொருளாராய்ச்சியை மேற்கொண்டபோது சீன நாகரீகம் கண்டுபிடிக்கப்பட்டது. சில வருடங்களுக்குமுன் வைகை நதிக்கரையோரத்தில் உள்ள கீழடி, ஆதிச்ச நல்லூர் போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்ட போது தமிழர் நாகரீகம் கண்டுபிடிக்கப்பட்டது. 3000 வருடங்களுக்கு முன்பே செங்கற்களால் வீடுகளைக்கட்டி அவற்றில் வடிகால் அமைப்புகளை ஏற்படுத்தி சிறந்த நாகரீகம் மிக்க மக்களாக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதை வைகை நதிக்கரையோர நாகரீகம் உலகத்திற்குக் காட்டியது.

1. ஆரம்பத்தில் மக்கள் எங்கே வீடுகளைக் கட்டி வாழ்ந்தனர்? (3 புள்ளிகள்)

_____

_____

2. "நீர், உணவு போன்ற அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்திலேயே பழைய காலத்தில் மக்கள் தாங்கள் வசிக்கின்ற இடத்தைத் தெரிவு செய்தனர்" இக் கூற்று சரியா? தவறா? காரணங்கள் எழுதுக. (8 புள்ளிகள்)

_____

_____

_____

_____

_____

3. உலகத்தில் நாகரீகத்தின் பிறப்பிடங்களாக விளங்கிய நான்கு நாகரீகங்களை எழுதுக. (4 புள்ளிகள்)

★ _____

★ _____

★ _____

★ _____

4. அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்ட தமிழர் நாகரீகம் பற்றி 5 வசனங்கள் எழுதுக. (5 புள்ளிகள்)

★ _____

_____

★ _____

_____

★ _____

_____

★ _____

_____

★ _____

_____

வினா இல	5	புள்ளிகள்	20	பக்கம்	8

★ நீங்கள் வாழ்கின்ற நகரத்தில் சிறுவர் பூங்கா உட்பட பல்வேறு பொழுதுபோக்கும் இடங்களை மாநகரசபை உருவாக்கித்தந்துள்ளது.

★ ஆனால் பெரிய நகரமாக வளர்ச்சியடைந்துள்ள எமது நகரத்தில் பல்வேறு வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் (STADIUM) இல்லாதது பெருங் குறையாக உள்ளது.

★ ஒரு சமுதாயத்தில் இளைஞர்கள் முக்கியமானவர்கள். அவர்கள் சுறுசுறுப்பானவர்களாக, ஆரோக்கியம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். அதற்கு அவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவது அவசியமானது. அதற்கு விளையாட்டு மைதானம் அத்தியாவசியமானது.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை அடிப்படையாக வைத்து நியூசவுத்வேல்ஸ் மாநில விளையாட்டு அமைச்சருக்கு உங்கள் நகரத்தில் ஒரு விளையாட்டு மைதானத்தை (STADIUM) அமைத்துத்தருமாறு, **100 சொற்களுக்குக் குறையாமல்**, ஒரு கடிதம் எழுதுக.

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.

1. ★ ஒரு அழகான நாயை நீங்கள் வளர்த்தீர்கள்.

   ★ அதனை சீராட்டிப் பாராட்டிச் சோறூட்டிக் குளிப்பாட்டி வளர்த்தீர்கள்.

   ★ ஒரு நாள் நீங்கள் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய போது அந்த நாயைப் பிணைத்துக் கட்டிய சங்கிலி அறுந்து கிடந்தது. நாயைக் காணவில்லை.

   ★ இரண்டு வாரங்களின் பின்பு தானாகவே உங்களின் வீட்டிற்கு வந்தது.

   நாய்மீது நீங்கள் வைத்திருந்த அன்பு, அதனைப் பாசத்தோடு வளர்த்தமை, நாய் காணாமல் போனபோது உங்களுக்கேற்பட்ட அதிர்ச்சி, இருவாரங்கள் அதன் பிரிவினால் ஏற்பட்ட துன்பம், அது மீண்டும் வீடு திரும்பிய போது உங்களுக்கேற்பட்ட மகிழ்ச்சி என்பவற்றை விபரித்து ஒரு கட்டுரை.

2. நாம் வாழ்கின்ற வீட்டையும், நாட்டையும் சுத்தமாக வைத்திருப்பதன் அவசியம்.

3. அன்னையர் தினம்.